ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1902/46 - 2015 පෙබරවාරි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.02.19

*1902/46 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் பாணந்துறை நகர சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக பாணந்துறை நகர சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், சக்கிரவர்த்திகே ஜெராடி ரியென்சி பிரனாந்து என்னும் பதவி வகித்த துணைத் தவிசாளர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான பாணந்துறை நகர சபையின் துணைத் தவிசாளர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளா ராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் , குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவிக்கவில்லையாதலாலும் ;

இப்போது பாணந்துறை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ஹென்னதிகே ரஸிக பிரியங்க பீரிஸ் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, 2011, மாச்சு மாதம் 17 ஆந் திகதி பாணந்துறை நகர சபைக்காக நடாத்தப்பட்ட தேர்தலில் அதற்கடுத்ததாக அதி கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள திரு. ஆரியவங்ஷ பத்ம ஸ்ரீ முனசிங்ஹ என்பவர், பாணந்துறை நகர சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ரஸிக பீரிஸ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பாணந்துறை நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
களுத்துறை,
2015, பெப்புருவரி 18.

3- 136



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.